بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 7

இதழ் 32

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

முஹர்ரம் 12 - ஹிஜ்ரி கமரி 1444 ★ ஸஃபர் 11 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 11 ஆகஸ்ட் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَا لَا تَجۡعَلۡنَا فِتۡنَۃً لِّلَّذِیۡنَ کَفَرُوۡا

وَاغۡفِرۡ لَنَا رَبَّنَا ۚ

اِنَّکَ اَنۡتَ الۡعَزِیۡزُ الۡحَکِیۡمُ ۝۶

**பொருள் :**

எங்கள் இறைவா! நிராகரிப்பவர்களுக்கு எங்களை ஒரு சோதனையாக ஆக்கிவிடாதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களை மன்னிப்பாயாக. நிச்சயமாக நீயே வல்லமையுள்ளவனும், நுண்ணறிவுள்ளவனுமாவாய். (மும்தஹினா:6)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும். அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஒவ்வொரு விஷயத்தையும் கூறுவதற்கு முன் அதன் விளைவு என்னவாக இருக்கும்? அதை பேசுவதற்கு அல்லாஹ்வின் அனுமதி எந்த அளவிற்கு உள்ளது? என்று சிந்தித்துக் கொள்ளுங்கள்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

மனிதன் (தனது) நாவினாலேயே தக்வாவிலிருந்து தொலைவில் சென்றுவிடுகிறான். நாவினாலேயே ஆணவம் கொள்கிறான். மேலும் நாவினாலேயே ஃபிர்அவ்னியப் பண்புகள் வந்துவிடுகின்றன. அதே நாவினாலேயே மறைவான செயல்களை பகட்டான செயல்களாக (மனிதன்) மாற்றிக் கொள்கிறான். மேலும் நாவின் குறைபாடு மிக விரைவாக உருவாகின்றது. எவர் ஒருவர் தொப்புளுக்கு கீழ் உள்ள உறுப்பு மற்றும் நாவை தீமையிலிருந்து பாதுகாத்துக் கொள்கிறாரோ அவர் சொர்க்கம் செல்வதற்கு நான் பொறுப்பேற்கிறேன் என்று ஹதீஸில் வந்துள்ளது. பொய்யான கூற்றுகள் ஏற்படுத்துவதைப் போன்ற பாதிப்பை ஹராமானவற்றை உண்பது ஏற்படுத்துவதில்லை. இதிலிருந்து ஹராமானவற்றை உண்பது நல்ல விஷயம் ஆகும் என்று எவரும் புரிந்து கொள்ளக் கூடாது. அவ்வாறு ஒருவர் புரிந்துகொண்டால் அது பெரும் தவறாகும். எனது பொருள் என்னவென்றால், ஒருவர் நிர்பந்தத்தின் காரணமாக பன்றி இறைச்சியை உண்டுவிட்டால் அது வேறு விவகாரம் ஆகும். ஆனால், அவர் தனது நாவினால் பன்றி இறைச்சிக்கு ஃபத்வா வழங்கிவிட்டால் அவர் இஸ்லாத்திலிருந்து தொலைவில் விலகி சென்றுவிடுகின்றார். அவர் அல்லாஹ்வால் தடுக்கப்பட்டதை ஆகுமானதாக ஆக்கிக் கொள்கிறார். சுருக்கமாக, நாவின் தீங்கு மிகவும் அபாயகரமானது என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. எனவே இறையச்சம் உடையவர் தனது நாவினை மிகவும் கட்டுப்பாட்டில் வைக்கின்றார். அவரது நாவிலிருந்து இறையச்சத்திற்கு எதிரான எந்த ஒரு கூற்றும் வெளிவருவதில்லை. எனவே நீங்கள் நாவின் மீது ஆட்சி செலுத்த வேண்டுமே தவிர நாவு உங்கள் மீது ஆட்சி செய்யக் கூடாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 382, காதியான் பதிப்பு 2018)

* * * * *

## நபிமொழி

**ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்கள் தமது கைகளால் சம்பாதித்து உண்டு வந்தார்கள்:**

(2072) : ஹஸ்ரத் மிக்தாம் (பின் மஃதீ கரிப்) ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மனிதன் தனது கையால் உழைத்து உண்பதை விட சிறந்த உணவு இல்லை. அல்லாஹ்வின் நபியான ஹஸ்ரத் தாவூத் (அலை) அவர்கள் தமது கரங்களால் (உழைத்து) சம்பாதித்த உணவையே உண்டு வந்தார்கள்.

புகாரி : பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு 2008

* * * * *

**முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் மிக அதிகமான ஞானத்தை வழங்கினான். அன்னார் (ஸல்) திருக்குர்ஆனிலிருந்து கொடுத்த விளக்கங்களைப் போன்று நாம் சுயமே பொருள் கொடுக்க முடியாது.**

وَیَوۡمَ نَبۡعَثُ فِیۡ کُلِّ اُمَّۃٍ شَہِیۡدًا عَلَیۡہِمۡ مِّنۡ اَنۡفُسِہِمۡ وَجِئۡنَا بِکَ شَہِیۡدًا عَلٰی ہٰۤؤُلَآءِ ؕ وَنَزَّلۡنَا عَلَیۡکَ الۡکِتٰبَ تِبۡیَانًا لِّکُلِّ شَیۡءٍ وَّہُدًی وَّرَحۡمَۃً وَّبُشۡرٰی لِلۡمُسۡلِمِیۡنَ

(அந்நஹ்ல்:90)

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள் :

இந்த வசனத்தில் முந்தைய வசனத்தின் கருத்துகள் முழுமை செய்யப்பட்டுள்ளன. அல்லாஹ் கூறினான்: எல்லா நபிமார்களும் தமது முன்மாதிரியை எடுத்து வைக்கும்போது, நீரும் அந்த மக்களுக்கு சாட்சியாளராக இருப்பீர். நாம் உம்மை முன்வைத்து அவர்களிடம் கேட்போம். இவரும் உங்களில் ஒருவராக இருந்தாரே? இவர் ஏன் ஷிர்க் போன்ற தீய கொள்கைகளில் சிக்கவில்லை? மேலும் இவர் எப்படி அல்லாஹ்வின் கட்டுப்பட்ட அடியாராக திகழ்ந்து மற்றவர்களின் நேர்வழிக்கு காரணியாக மாறினார்? அவர் மீது இறைவனின் வேதம் இறங்கியது. நீங்கள் அதிலிருந்து இழப்பிற்குரியவராக இருந்தீர்கள். மாறாக, நீங்கள் அந்த இறைவேதத்தின் அவசியத்தை உணராமலேயே இருந்தீர்கள். இந்த காரணத்தினால் தான் நீங்கள் அவ்வாறு செய்தீர்கள்!

அஹ்லே குர்ஆன் என்று கூறிக்கொள்பவர்கள் பெரும் தவறிழைக்கின்றனர். அதாவது, முஹம்மது (ஸல்) அவர்கள் நம்மைப் போன்ற மனிதராகவே இருந்தார்கள். நாங்கள் ஏன் அவரது கூற்றை ஏற்க வேண்டும்? திருக்குர்ஆனில் என்ன உள்ளதோ அதனையே ஏற்போம் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், இங்கு இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கூற்றை ஏற்பதற்கான கேள்வியே எழவில்லை. மாறாக, இங்கு எழுகின்ற கேள்வி என்னவென்றால், அன்னார் (ஸல்) அவர்கள் நம் அனைவரையும் விட அதிகமாக திருக்குர்ஆனை அறிந்திருந்தார்களா? இல்லையா? அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَا یَنۡطِقُ عَنِ الۡہَوٰی اِنۡ ہُوَ اِلَّا وَحۡیٌ یُّوۡحٰی

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இறை வஹீக்கு ஏற்பவே திருக்குர்ஆனைக் குறித்து கூறிவந்தார்கள். அதில் அன்னார் (ஸல்) அவர்கள் தவறிழைக்கவில்லை. எனவே அல்லாஹ் எவரை பாதுகாத்துள்ளானோ, அவரின் திருக்குர்ஆன் ஞானத்திற்கு, மற்ற அனைவரின் ஞானத்தை விட முன்னுரிமை வழங்கப்படும். இந்த ஹதீஸ் ஸஹீஹானது இல்லை என்று விவாதம் செய்ய நமக்கு

இதன் தொடர்ச்சி - 9ஆம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

ஹஸ்ரத் அபூபக்ர் [ரலி] மிகவும் தொலைநோக்கு பார்வை கொண்டவரும், ஆழமான அகப்பார்வைக்கு சொந்தக்காரரும், விளைவின் மீது முழுமையான பார்வை கொண்டவரும் ஆவார்கள்.

எங்கு கடினம் காட்டுவதற்கான அவசியம் இருக்குமோ அங்கு கடினம் காட்டுவார்கள்.
எங்கு மன்னிப்பு மற்றும் கண்டும் காணாமல் இருப்பதற்கு அவசியம் இருக்குமோ அங்கு மன்னிப்பையும், கண்டும் காணாமல் இருத்தலையும் கைகொள்வார்கள்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 ஜூலை 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **வஃபா** மாதம் **08ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நடைபெற்ற போர்ப் படைகளைப் பற்றிய குறிப்பு நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பதினொன்றாவது போர்ப் படையைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது, ஏமனின் முர்தத் ஆன கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபூ உமைய்யா (ரலி) அவர்களின் அந்தப் படை சென்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபூ உமைய்யா (ரலி) அவர்களுக்கு ஒரு கொடியை கொடுத்தார்கள். மேலும், அஸ்வத் அன்ஸீயின் படையை எதிர்கொள்ளுங்கள். மேலும் கைஸ் பின் மக்சூஃவும் ஏனைய ஏமன் வாசிகளும் சண்டையிட்டு வந்த அப்னாஃவிற்கு உதவி செய்யுங்கள் என்று அன்னாருக்கு கட்டளை வழங்கினார்கள். அப்போது, ஏமனில் இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தினர் இருந்தனர். ஸபா மற்றும் ஹுமைர் குடும்பத்தைச் சார்ந்த ஏமனின் அசல் குடிமக்கள் ஒரு கூட்டத்தினர்(ஆவர்). இரண்டாவது கூட்டத்தினர், அப்னாஃ என்று அழைக்கப்பட்ட பாரசீகத்தைச் சார்ந்த முன்னோர்களின் சந்ததிகள் ஆவர். இந்த அப்னாஃக்கள் அந்தக் காலத்து ஏமனின் மிகவும் அதிகாரம் படைத்த சிறுபான்மையினராக இருந்தனர். ஒரு நீண்ட காலம் வரை ஏமனின் ஆட்சியாளர் கிஸ்ராவின் அரசாங்கத்தின் கீழ் இருந்தார். எனவே அரசாங்கத்தின் பெரும்பான்மை பதவிகள் அப்னாஃவிற்கு கிடைத்திருந்தது.

எவ்வாறு இருப்பினும், எழுதப்பட்டுள்ளது. அதாவது, பணிகளை முடித்துவிட்டு கந்தா கோத்திரத்துடன் போரிடுவதற்காக ஹஸ்ர மௌத்திற்கு சென்றுவிடும்படி ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வழிகாட்டல் வழங்கினார்கள். (தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 257-பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

ஹஸ்ர மௌத் ஏமனிலிருந்து கிழக்குப் பக்கம் அமைந்துள்ள ஒரு பரந்த பகுதியாகும். அதில் இருபதுக்கும் மேற்பட்ட ஊர்கள் உள்ளன. ஹஸ்ர மௌத் மற்றும் ஸன்ஆஃவிற்கு இடையில் 216 மைல் தூரம் உள்ளது. (முஃஜமுல் பல்தான் தொகுதி 2, பக்கம் 311)

கிந்தா என்பது ஏமனின் ஒரு கோத்திரத்தின் பெயராகும். (ஃபர்ஹன்ங் சீரத் பக்கம் 226, ஸவார் அகடமி கராச்சி)

ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களின் அறிமுகம் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது, அன்னார் (ரலி) அவர்களின் பெயர் முஹாஜிர் பின் உமைய்யா பின் முகைய்ரா பின் அப்தில்லாஹ் ஆகும். ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபூஉமைய்யா உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் உம்மே சல்மா (ரலி) அவர்களின் சகோதரராக இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் பத்ர் போரில் இணைவைப்பாளர்களின் சார்பாக கலந்துகொண்டிருந்தார்கள். மேலும் அந்த நாளன்று ஹஷ்ஷாம் மற்றும் மசூத் என்ற அன்னாரின் இரு சகோதரர்கள் கொலை செய்யப்பட்டனர். அன்னார் (ரலி) அவர்களின் அசல் பெயர் வலீத் ஆகும். அதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மாற்றம் செய்துவிட்டார்கள். (அஸதுல் காபா, பாகம் 5, பக்கம் 265 தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2003)

ஓர் அறிவிப்பில் வருகிறது. முஹாஜிர் தபூக் போரிலிருந்து பின்தங்கிவிட்டார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்தப் போரிலிருந்து திரும்பிவந்தபோது அன்னார் (ரலி) அவர்கள் மீது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் கோபமுற்றார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் உம்மே சல்மா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தலையை சுத்தம் செய்துக் கொண்டிருந்தார்கள். தாங்கள் (ஸல்) அவர்கள், எனது சகோதரர் மீது கோபமாக இருக்கும் நிலையில் எந்த ஒரு விஷயமும் எப்படி எனக்கு நன்மை பயக்க முடியும்? என்று கூறினார்கள். ஹஸ்ரத் உம்மே சல்மா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சிறிது மென்மை, மற்றும் பரிவின் அடையாளங்களை கண்டபோது அன்னார் (ரலி) அவர்கள் தமது பணிப்பெண்ணிடம் சைகை செய்தார்கள். அவர் சென்று முஹாஜிரை அழைத்து வந்தார். முஹாஜிர் தொடர்ந்து தமது காரணங்களை கூறிக் கொண்டிருந்தார். இறுதியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரின் காரணங்களை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். மேலும், அன்னாரிடம் திருப்தி கொண்டுவிட்டார்கள். மேலும் அன்னாரை கிந்தாவின் ஆளுநராக நியமித்துவிட்டார்கள். ஆனால், அன்னார் (ரலி) நோய்வாய்ப்பட்டுவிட்டார்கள். அங்கு அன்னாரால் செல்ல முடியவில்லை. எனவே தமது அந்தப் பணியையும் செய்யுமாறு அன்னார் ஸய்யாதிற்கு எழுதினார்கள். அடுத்து அந்த நோயிலிருந்து அன்னார் குணம் அடைந்துவிட்டப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரின் அமாரத்தின் நியமனத்தை பூர்த்தி செய்தார்கள். நஜ்ரானிலிருந்து ஏமனின் இறுதி எல்லை வரையிலான பகுதிகளுக்கு அன்னாரை ஆட்சியாளராக ஆக்கிவிட்டார்கள். மேலும், போருக்கான கட்டளையையும் வழங்கினார்கள்.

(தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 300- பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

ஸஹ்ஹாக் பின் ஃபய்ரோஸ் கூறுகின்றார்கள்: முதன் முதலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஏமனிலிருந்து மார்க்கப் புறக்கணிப்பு ஆரம்பமானது. அதன் தோற்றுனர் துல்ஹிமார் அப்ஹலா பின் கஅப் ஆவான். அவன் அஸ்வத் பின் அன்ஸீ என்ற பெயரால் மிகவும் பிரபல்யமாகி இருந்தான். (தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 224- பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

அஸ்வத் அன்ஸீ ஏமனின் கோத்திரம் பனூ அன்ஸின் தலைவனாக இருந்தான். கருப்பு நிறத்தின் காரணமாக அஸ்வத் என்று அழைக்கப்பட்டான். (அபுந் நஸர் மொழிபெயர்ப்பு செய்த ஸீரத் ஸய்யிதுனா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எனும் நூல்-பக்கம் 570)

ஓர் அறிவிப்பில் அவனது பெயர் அப்ஹலா பின் கஅப் என்பதற்கு பகரமாக, அய்ஹலா பின் கஅப் பின் அஃப் அன்ஸி என்று கூறப்பட்டுள்ளது. அஸ்வத் அன்ஸியின் சுட்டுப் பெயர் துல் ஹிமார் ஆகும். ஏனென்றால் அவன் எப்போதும் துணியைக் கட்டிக் கொண்டே இருந்தான். (அல்காமில் ஃபித்தாரீக் லி இப்னி அஸீர் தொகுதி 2, பக்கம் 201, திக்ரு அக்பாருல் அஸ்வதுல் அன்ஸீ, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2006)

அவன் துல்ஹிமார் என்று அழைக்கப்பட்டதற்கு காரணமாக சிலர் இதனை கூறுகின்றனர். அதாவது தன்னிடம் வெளிப்படுகின்ற நபர் கழுதையின் மீது சவாரி செய்கின்றார் என்று அவன் கூறிவந்தான்.

அதற்கு இவ்வாறு காரணம் கூறப்படுகிறது. அதாவது, அஸ்வதிடம் பயிற்சி கொடுக்கப்பட்ட கழுதை இருந்தது. உனது முதலாளிக்கு ஸஜ்தா செய் என்று அதனிடம் கூறப்படும்போது, அது ஸஜ்தா செய்யும். அமரும்படி கூறினால் அது அமர்ந்துவிடும். நிற்கும்படி கூறினால் நின்றுவிடும். (அல் இன்ஸாபுஸ்ஸஹாரி பாகம் 1 பக்கம் 387 பதிப்பு 2006)

வேறு சிலர் அவனது சுட்டுப் பெயரான துல்ஹிமார் என்பதற்கு போதையில் மூழ்கி இருக்கக் கூடியவன் என்றும் பொருள் கொடுக்கின்றனர். (அபுந் நஸர் மொழிபெயர்ப்பு செய்த ஸீரத் ஸய்யிதுனா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எனும் நூல்- பக்கம் 570)

எவ்வாறு இருப்பினும் (இவ்வாறு) எழுதப்பட்டுள்ளது: அதாவது, முஸைலமா கஸ்ஸாப் ரஹ்மானுல் யமாமா என்று தனக்கு சுட்டுப் பெயர் வைத்துக் கொண்டது போல, ரஹ்மானுல் ஏமன் என்ற சுட்டுப்பெயரை அஸ்வத் தனக்கு(தானே) சூட்டிக் கொண்டான். தமக்கு வஹீ வருவதாகவும், தமக்கு எதிரிகளின் அனைத்து சதித்திட்டங்களைக் குறித்தும் முன்னரே தகவல் கிடைத்துவிடுகின்றது என்றும் அவன் கூறினான். (அபுந் நஸர் மொழிபெயர்ப்பு செய்த ஸீரத் ஸய்யிதுனா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எனும் நூல்- பக்கம் 571)

அஸ்வத் ஒரு மந்திரவாதியாக இருந்தான். மிகவும் விநோதமான கண்கட்டி வித்தைகளை மக்களுக்கு காட்டிவந்தான். (அல்காமில் ஃபித்தாரீக் லி இப்னி அஸீர் தொகுதி 2, பக்கம் 201, திக்ரு அக்பாருல் அஸ்வதுல் அன்ஸீ, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2006)

புகாரி அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, இரண்டு பொய் நபித்துவ வாதிகள் வெளிப்படுவர் என்று கனவில் முன்னரே கூறப்பட்டிருந்தது.

எனவே ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

قَالَ رَسُوْلُ اللهِ بَيْنَا أَنَا نَائِمٌ أُتِيتُ
بِخَزَائِنِ الْأَرْضِ، فَوُضِعَ فِيْ كَفِّيْ سِوَارَانِ مِنْ ذَهَبٍ،
فَكَبُرَا عَلَيَّ، فَأَوْحَى اللهُ إِلَيَّ أَنِ انْفُخْهُمَا،
فَنَفَخْتُهُمَا فَذَهَبَا، فَأَوَّلْتُهُمَا الْكَذَّابَيْنِ اللَّذَيْنِ
أَنَا بَيْنَهُمَا، صَاحِبَ صَنْعَاءَ، وَصَاحِبَ الْيَمَامَةِ

(ஸஹீஹ் புகாரி கிதாபுல் மகாஸி வஃவத் பனி ஹனீஃபா அறிவிப்பு எண்: 4375)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் உறங்கிக் கொண்டிருக்கும்போது, கனவில் எனக்கு பூமியின் கருவூலங்கள் வழங்கப்பட்டன. எனது கையில் இரண்டு தங்கக் காப்புகள் வைக்கப்பட்டன. அது எனக்கு கஷ்டமாக இருந்தது. நான் அவர்கள் இருவர் மீதும் ஊதவேண்டும் என்று வஹீ இறங்கியது. நான் அவர்கள் மீது ஊதியபோது அவர்கள் மறைந்துவிட்டனர். நான் அதிலிருந்து இரண்டு பொய்யர்கள் என்று பொருள் கொண்டேன். ஸின்ஆஃவைச் சார்ந்த அன்ஸீ, யமாமாவைச் சார்ந்த முஸைலமா கஸ்ஸாப்.

புகாரியிலேயே மற்றோர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கனவு என்னிடம் கூறப்பட்டது. அன்னார் (ஸல்) கூறினார்கள். எனது இரு கரங்களிலும் இரண்டு தங்கக் காப்புகள் வைக்கப்பட்டன. அதனால் நான் பதற்றமடைந்தேன். மேலும், (கனவில்) அதனை நான் தீயதாக கருதினேன். என்னிடம் கூறப்பட்டபோது, நான் அவர்கள் இருவர் மீதும் ஊதினேன். அப்போது அவர்கள் மறைந்துவிட்டனர். அதாவது அல்லாஹ்வின் புறமிருந்து (அவ்வாறு செய்யும்படி) எனக்கு கூறப்பட்டது. அந்தக் கனவிற்கு நான் இவ்வாறு விளக்கம் கொடுத்தேன். அதாவது எனக்கு எதிராக இரு பொய்யர்கள் வெளிப்படுவார்கள்.

அவர்கள் இருவரில் ஒருவன், ஏமனில் ஃபீரோஸ் கொலை செய்த அன்ஸீ என்பவன் ஆவான். மற்றொருவன் முஸைலமா கஸ்ஸாப் ஆவான்.

(ஸஹீஹ் புகாரி கிதாபுல் மகாஸி பாடம் கிஸ்ஸா அஸ்வதுல் அன்ஸீ ஹதீஸ்: 4379)

ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஈரானிய அரசன் கிஸ்ராவிற்கு இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்து கடிதம் எழுதியபோது அவன் சினம் கொண்டு தனக்கு கீழ் பணிபுரியும் ஊழியரான ஏமன் பாஸானிற்கு, (சிலர் அவனது பெயர் பத்பான் என்றும் கூறுகின்றனர்) நீ அந்த நபரின் அதாவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் தலையை எடுத்துக் கொண்டு அரசவைக்கு வரவேண்டும் என்று கட்டளையிட்டான். (நவூதுபில்லாஹ்) பாஸான் இரண்டு நபர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பினான். ஆனால், அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது அல்லாஹ் என்னிடம் கூறினான். உனது அரசனை அவனது மகன் கொன்றுவிட்டான். மேலும், அவரது இடத்தில் அவன் சுயமே அரசனாகி (அரியணையில்) அமர்ந்துவிட்டான். அத்துடன் பாஸானிற்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பும் அன்னார் (ஸல்) அவர்கள் விடுத்தார்கள். மேலும் கூறினார்கள்: அவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டுவிட்டால் பின்னர் அவர் தொடர்ந்து ஏமனின் ஆட்சியாளராக வைக்கப்படுவார். இதைக் கேட்டு இரு நபர்களும் திரும்பி சென்றுவிட்டுவிட்டனர். பாஸானிடம் அனைத்து விஷயங்களையும் கூறினார்கள். இதற்கிடையில், கிஸ்ராவை அவனது மகன் ஷய்ரூயா கொன்றுவிட்டான். அவனது மகன் அவரது இடத்தில் அரசனாக அமர்ந்துவிட்டான் என்ற செய்தி பாஸானிற்கு கிடைத்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த செய்தி முழுமை அடைந்ததை பாஸான் கண்டபோது, அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இஸ்லாமிய அழைப்பை ஏற்றுக் கொண்டுவிட்டார். மேலும், ஹஸ்ரத்

நபி (ஸல்) அவர்கள் அவரை ஏமனில் அவரை ஆட்சியாளராக தொடரச் செய்தார்கள். (முஹம்மது ஹுஸைன் ஹேகல் மொழிபெயர்ப்பு செய்த ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் என்ற நூல்)

அந்தக் கடிதம் தொடர்பாகவும், இஸ்லாத்தின் அழைப்பை பற்றியும் கிஸ்ரா கூறியதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் ஓரிடத்தில் எழுதியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அப்துல்லாஹ் பின் ஹுஸாஃபா (ரலி) கூறுகின்றார்கள். நான் கிஸ்ராவின் அரசவையை அடைந்தபோது, நான் உள்ளே செல்வதற்கு அனுமதி வேண்டினேன். அனுமதி வழங்கப்பட்டது.

நான் முன்னால் சென்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கடிதத்தை கிஸ்ராவின் கையில் கொடுத்தபோது அவன் மொழிபெயர்ப்பாளருக்கு அதனை வாசிக்கும்படி கட்டளையிட்டான். மொழிபெயர்ப்பாளர் அதன் பொருளை வாசித்துக் காட்டியபோது கிஸ்ரா சினம் கொண்டு கடிதத்தை கிழித்துவிட்டான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அப்துல்லாஹ் பின் ஹுஸாஃபா அந்த செய்தியைக் கூறியபோது அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கிஸ்ரா எமது கடிதத்துடன் எவ்வாறு நடந்துகொண்டானோ அதேபோன்றே இறைவன் அவனது அரசாட்சியுடனும் நடந்துகொள்வான்.

கிஸ்ராவின் இந்த செயலுக்குக் காரணம் இதுவாக இருந்தது. அதாவது, அரேபியாவின் யூதர்கள், ரோமானியர்களின் அரசாங்கத்திடமிருந்து தப்பிச் சென்ற யூதர்களின் மூலமாக ஈரானிய அரசாங்கத்திடம் சென்றுவிட்டனர். ரோமானிய அரசாங்கத்திற்கு எதிரான சதித் திட்டங்களில் கிஸ்ராவிற்கு ஆதரவு அளித்ததால் கிஸ்ரா மிகவும் கோபமுற்றிருந்தான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக, புகார்கள் செய்து வந்த நபர்கள் கிஸ்ராவை தூண்டிவிட்டிருந்தனர். மேலும், அந்தக் கடிதம் கிஸ்ராவின் எண்ணப்படி அந்த மக்களின் கருத்தை உண்மைப்படுத்தியிருந்தது. இந்த நபர் எனது அரசாங்கத்தின் மீது கண் வைத்துள்ளார் என்று அவன் எண்ணினான். எனவே அந்தக் கடிதத்திற்குப் பிறகு, உடனடியாக கிஸ்ரா தனது ஏமனின் கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதினான். அதன் கருத்து இவ்வாறாக இருந்தது: அதாவது குரைஷிகளில் ஒருவர் நபித்துவ வாதம் செய்து கொண்டிருக்கிறார். மேலும், அவர் தமது வாதத்தில் வளர்ந்து கொண்டே செல்கிறார். அவரை பிடித்துக் கொண்டு என்னிடம் கொண்டுவருவதற்கு, இரண்டு நபர்களை அனுப்பு. எனவே அந்நேரத்தில் கிஸ்ராவின் சார்பாக ஏமனின் கவர்னராக இருந்த பாஸான் ஓர் இராணுவ அதிகாரியையும், ஒரு சவாரியையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பினான். மேலும், ஒரு கடிதமும் அன்னார் (ஸல்) அவர்களுக்கு எழுதப்பட்டது. அந்த அதிகாரி முதலில் மக்காவிற்கு சென்றார். தாயிஃப் நகரத்திற்கு அருகில் சென்றடைந்தபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் இருக்கின்றார்கள் என்பது அவருக்குத் தெரிய வந்தது. எனவே மதீனாவிற்கு சென்று அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கூறினார்:

தங்களை கைது செய்து தம் முன் கொண்டு வந்து நிறுத்துமாறு கிஸ்ரா ஏமனின் கவர்னர் பாஸானிற்கு கட்டளையிட்டுள்ளார். தாங்கள் அந்தக் கட்டளையை நிராகரித்துவிட்டால், அவர் தங்களை அழித்துவிடுவார். மேலும் தங்களின் சமுதாயத்தையும் அழித்துவிடுவார். மேலும் தங்களின் நாட்டை நாசமாக்கிவிடுவார். எனவே தாங்கள் கண்டிப்பாக எங்களுடன் வந்துவிடுங்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரின் கூற்றைக் கேட்டுவிட்டு கூறினார்கள்: நல்லது! நாளை நீங்கள் மீண்டும் என்னை வந்து சந்தியுங்கள்.

இரவில் அன்னார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். கிஸ்ராவின் அவமரியாதையான நடத்தைக்கு தண்டையாக, நாம் அவனது மகனை அவன் மீது ஆதிக்கம் செலுத்த வைத்துவிட்டோம் என்று, கம்பீர மிக்க இறைவன் அன்னாருக்கு செய்தி வழங்கினான்.

எனவே இதே ஆண்டு ஜமாதிவுல் ஊலா மாதத்தின் பத்தாம் நாள் திங்கட்கிழமையன்று அவனை அவன் கொன்றுவிடுவான். மேலும் சில அறிவிப்புகளில் வருகிறது. அதாவது, அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இன்று இரவு அவன் அவரைக் கொன்றுவிட்டான். அந்த இரவு ஜமாதிவுல் ஊலாவின் அதே பத்தாவது இரவாக இருந்திருக்கக் கூடும். பொழுது விடிந்ததும், ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள், அவர்கள் இருவரையும் அழைத்தார்கள். அவர்களிடம் அந்த முன்னறிவிப்பைக் கூறினார்கள். பின்னர் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பாஸானிற்கு கடிதம் எழுதினார்கள். அதாவது, கிஸ்ரா இன்ன மாதத்தில், இன்ன தேதியில் கொலை செய்யப்பட்டுவிடுவான் என்று இறைவன் எனக்கு செய்தி வழங்கியுள்ளான்.

இந்தக் கடிதம் ஏமனின் கவர்னருக்கு கிடைத்தபோது, இவர் உண்மையான நபி என்றால் அவ்வாறே நடந்துவிடும். இல்லையென்றால் அவருக்கும் அவரது நாட்டிற்கும் நல்லதல்ல என்று கூறினார். சிறிது காலத்திற்கு பிறகு,ஈரானின் ஒரு கப்பல் ஏமனின் துறைமுகத்தில் வந்து நின்றது. கவர்னரிடம், ஈரானிய அரசரின் கடிதம் ஒன்று கொடுக்கப்பட்டது. அதன் முத்திரையை பார்த்தவுடன் மதீனாவின் நபி உண்மையை கூறியிருந்தார். ஈரானிய ஆட்சி மாறிவிட்டது. அந்தக் கடிதத்தில் வேறு ஒரு அரசனின் முத்திரை உள்ளது என்று ஏமனின் கவர்னர் கூறினார். மேலும், அவர் கடிதத்தை திறந்தபோது அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. அதாவது, ஈரானின் கிஸ்ரா ஷேரவ்யா புறமிருந்து ஏமனின் கவர்னர் பாஸானிற்கு எழுதப்படுகிறது. நான் முன்னாள் கிஸ்ராவான எனது தந்தையை கொன்றுவிட்டேன். ஏனென்றால், அவர் நாட்டில் இரத்தம் சிந்துதலுக்கான வழியை திறந்துவிட்டிருந்தார். நாட்டின் கண்ணியமிக்க மக்களை கொலை செய்து வந்தார். மேலும் குடிமக்கள் மீது அநீதியிழைத்து வந்தார். எனது இந்தக் கடிதம் உம்மை வந்தடையும்போது, உடனடியாக அனைத்து அதிகாரிகளிடமிருந்து எனக்கு கட்டுப்படுவதற்கான உறுதிமொழியை வாங்குவீராக. மேலும் இதற்கு முன்பு அரேபியாவின் ஒரு நபியை கைது செய்வதற்கு எனது தந்தை வழங்கிய கட்டளையை ரத்து செய்யப்பட்டதாக கருதுவீராக.

இந்தக் கடிதத்தை படித்துவிட்டு பாஸான் எந்த அளவிற்கு தாக்கத்திற்கு உள்ளானார் என்றால், அந்தநேரமே அவரும் அவருடைய பல தோழர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிட்டனர். மேலும், தான் இஸ்லாத்தை தழுவிய தகவலை அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கினார். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், தாருல் உலூம் தொகுதி 20, பக்கம் 317-319)

தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் எனும் நூலில் இந்த விளக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்.

பாஸான் இறந்துவிட்ட பிறகு,

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏமனின் பல்வேறு பகுதிகளில் அதிகாரிகளை நியமித்தார்கள். ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) ஏமன் மற்றும் ஹஸ்ர மௌத்தின் அந்த அனைத்து பகுதிகளுக்கும் முஅல்லிம் (ஆசிரியர்)ஆக இருந்தார்கள். எனவே அன்னார் அந்த அனைத்து பகுதிகளிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வந்தார்கள். அஸ்வத் என்பவன் மந்திரவாதியாக இருந்தான். மேலும் அவன் ஏமனின் தென்பகுதியில் வசித்து வந்தான். அவன் கண்கட்டி வித்தைகள், முஸஜ்ஜஃ மற்றும் முகஃபா எனும் உரையாடல்கள் போன்றவற்றின் காரணமாக மக்களின் கவனத்தை விரைவாக தன்பக்கம் ஈர்த்துவிட்டான். அவன் நபித்துவ வாதத்தையும் செய்துவிட்டான். தன்னிடம் ஒரு வானவர் வருகின்றார். அவர் தனக்கு எல்லா விஷயங்களையும் கூறுகின்றார். மேலும் தனது எதிரிகளின் திட்டங்களையும் இரகசியங்களையும் தனக்கு வெளிப்படுத்திவிடுகின்றார் என்று அவன் மக்களிடம் வெளிப்படுத்தி வந்தான். அதன் காரணமாக பாமர, மற்றும் அறிவீனமான மக்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் அவனைச் சுற்றி ஒன்றுகூடிவிட்டனர். உண்மையில், அஸ்வத் அன்ஸீ இந்த முழக்கத்தையும் எழுப்பி வந்தான். அதாவது, ஏமன் வாசிகளுக்கு மட்டுமே உரியது. எனவே ஏமனின் குடிமக்கள் இந்த சமுதாய முழக்கத்தால் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானார்கள்.

இந்த முழக்கம் மிகவும் பழமையானது. இன்றும் கூட இந்த முழக்கம் பயன்படுத்தப்படுகிறது. மேலும். இதன் காரணமாகவே இன்று உலகில் குழப்பம் பரவியுள்ளது.

எவ்வாறு இருப்பினும், அதுவரை ஏமனில் இஸ்லாம் மக்களிடம் முழுமையாக நிலைபெற்றிருக்கவில்லை. எனவே அந்நியரின் ஆட்சியிலிருந்து விடுதலையாவதற்கு அஸ்வதுடைய சமுதாய முழக்கத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அவனுடன் இணைந்து கொண்டார்கள்.

இந்த அபாயகரமான தகவல்கள் கிடைத்தபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மோத்தா போரின் ஷுஹதாக்களுக்காக பழிவாங்குவதற்காகவும், வடக்குப் பக்கத்திலிருந்து தாக்குதல்களை தடுப்பதற்காகவும், ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்களின் படையை ஆயத்தப்படுத்துவதில் மும்முரமாக இருந்தார்கள். நீங்கள் உங்கள் சார்பாக அஸ்வதிற்கெதிரான போரை தொடர்ந்து செய்து வாருங்கள். உஸாமாவின் படை வெற்றியடைந்து திரும்பிய உடனேயே ஏமனை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டுவிடும் என்று அன்னார் (ஸல்) அவர்கள் ஏமனின் தலைவர்களின் பெயரில் தூதுச் செய்தி அனுப்பினார்கள்: (அல்காமில் ஃபித் தாரீக் தொகுதி 2, பக்கம் 201 பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

அஸ்வத் அன்ஸீ படையில் எழுநூறு குதிரை சவாரி வீரர்கள் இருந்தனர். அவன் பெரும் படையை திரட்டியிருந்தான். அது மட்டுமின்றி ஒட்டக சவாரி வீரர்களும் இருந்தனர். பின்னர் அவனது அதிகாரம் மிகவும் வலிமை அடைந்துவிட்டது. முஸ்ஹிஜ் கோத்திரத்தில் அதன் செயல் தலைவராக அமர் பின் மஃதி கரிப் இருந்தார். அம்ர் பின் மஃதீ கரிப் ஏமனின் பிரபலமான போர்வீரராக இருந்தார். மேலும், கவிஞராகவும், பேச்சாளராகவும் இருந்தார். அவரது சுட்டுப் பெயர் அபூ ஸவ்ர் ஆகும். ஹிஜ்ரி பத்தாம் ஆண்டு அவர் தமது கோத்திரம் பனூ ஸபீதின் குழுவினருடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி இஸ்லாத்தை தழுவியிருந்தார். பின்னர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர் முர்தத் ஆகிவிட்டார். ஆனால், பிற்காலத்தில் மீண்டும் உண்மையின் பக்கம் திரும்பி வந்துவிட்டார். காதிஸியாப் போரில் மிகவும் சிறப்பான பணிகளை செய்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் இறுதி நாட்களில் அவர் மரணமடைந்தார். (அல்காமில் ஃபித் தாரீக் தொகுதி 2, பக்கம் 201 பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

எவ்வாறு இருப்பினும் எழுதப்பட்டுள்ளது: அதாவது அஸ்வத் அன்ஸீ முதலில் நஜ்ரான் வாசிகள் மீது தாக்குதல் நடத்தி ஹஸ்ரத் அமர் பின் ஹஷ்ஷாம் (ரலி) மற்றும் ஹஸ்ரத் காலித் பின் ஸயீது (ரலி) ஆகியோரை அங்கிருந்து வெளியேற்றிவிட்டான். அதன் பிறகு,அவன் ஸன்ஆ மீது தாக்குதல் நடத்தினான். அங்கு ஹஸ்ரத் ஷஹ்ர் பின் பாஸான் (ரலி) அவர்கள் அவனை எதிர்த்து போரிட்டார்கள். ஆனால், ஷஹீதாகிவிட்டார்கள். ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அந்த நாட்களில் ஸின்ஆவில் தான் தங்கியிருந்தார்கள். ஆனால், அந்த சூழ்நிலையின் காரணமாக ஹஸ்ரத் அபூமூஸா (ரலி) அவர்களிடம் மாஆரிப் எனும் இடத்திற்கு சென்றுவிட்டார்கள். அங்கிருந்து இருவரும் ஹஸ்ர மௌத்திற்கு சென்றனர். இவ்வாறு அஸ்வத் அன்ஸீ ஏமனின் பகுதிகளை கைப்பற்றிவிட்டான். ஹஸ்ரத் ஷஹ்ர் பின் பாஸான் (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு அன்னாரின் மனைவியை அஸ்வத் அன்ஸீ, பலவந்தமாக திருமணம் செய்து கொண்டான். அவரின் (மனைவியின் பெயர்) மர்ஸுபானா என்றும், சில நூல்களின்படி ஆஸாத் என்றும் கூறப்படுகிறது. இதற்கிடையில் ஹஸ்ர மௌத் மற்றும் ஏமனின் முஸ்லிம்களிடமிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கடிதம் கிடைத்தது. அதில் அஸ்வத் அன்ஸீயுடன் போர்புரிவதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. எனவே அந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் எழுந்தார்கள். அதன் மூலம் முஸ்லிம்களின் உள்ளம் வலிமையடைந்துவிட்டது.

ஜிஷ்னஷ் தய்லமி கூறுகின்றார்கள்: வபர் பின் யுஹன்னிஸ், இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கடிதத்தை எடுத்துக் கொண்டு எங்களிடம் வந்தார்.

ஜிஷ்னஷ் தய்லமியின் பெயர் சில இடங்களில் ஜுஷைஷ் தய்லமி என்றும் கூறப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அஸ்வத் அன்ஸீயை கொலை செய்வதற்காக ஏமனில் எந்த நபர்களுக்கு கடிதம் எழுதியிருந்தார்களோ அவர்களில் இந்த மக்களும் அடங்குவர். (அல்காமில் ஃபித் தாரீக் தொகுதி 2, பக்கம் 201-202 பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

வபர் பின் யுஹன்னிஸின் பெயர் வப்ரஃ பின் யுஹன்னஸ் என்றும் கூறப்பட்டுள்ளது. அவர் ஏமனின் அப்னாவைச் சார்ந்தவராக இருந்தார். ஹிஜ்ரி பத்தாம் ஆண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி இஸ்லாத்தை தழுவியிருந்தார். அவர் கூறுகின்றார்: நாங்கள் எங்களது மார்க்கத்தில் நிலைத்திருக்க வேண்டும் மேலும் போர் அல்லது திட்டங்கள் மூலமாக அஸ்வதிற்கு எதிராக போர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த தூதுச் செய்தியை அந்த நேரத்தில் இஸ்லாத்தில் உறுதியாக நிலைநிற்கும் மக்களுக்கும் எட்ட வைக்கவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு கட்டளை வழங்கியிருந்தார்கள். நாங்கள் (அதன்படி) செயல்பட்டோம். ஆனால், அஸ்வதிற்கு எதிராக வெற்றி பெறுவது மிகவும் கடினம் என்பதை நாங்கள் கண்டோம். (தாரீகே தபரி தொகுதி 2, பக்கம் 248-தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

ஜிஷ்னஷ் தய்லமி

அறிவிக்கின்றார்கள்: எங்களுக்கு ஒரு விஷயம் தெரியவந்தது. அதாவது, அஸ்வத் மற்றும் கைஸ் பின் அப்தே யகூஸ்விற்குமிடையில் சிறிது மனக் கசப்பு ஏற்பட்டது. அவர்களுக்குள் பிரிவு ஏற்பட்டது. அல்லது குறைந்தபட்சம் சிறிது பகைமை ஏற்பட்டிருந்தது. எனவே கைஸின் உயிருக்கு ஆபத்து உள்ளது என்று நாங்கள் எண்ணினோம்.

கைஸ் பின் அப்தே யகூஸின் பெயர் மற்றும் பரம்பரை தொடர்பாக கருத்துவேறுபாடு உள்ளது. ஒரு கூற்றின்படி, அவரது பெயர் ஹுபைரா பின் அப்தே யகூஸ் ஆகும். அப்தே யகூஸ் பின் ஹுபைரா என்றும் கூறப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் அபூ மூஸா கூறுகின்றார்: இவர் கைஸ் பின் அப்தே யகூஸ் பின் மக்சூஹ் ஆவார். ஒரு கூற்றிற்கேற்ப அவர் சஹாபி கிடையாது. அதேநேரம் ஏனைய கூற்றுகளின்படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சந்திப்பதற்கும், அன்னார் (ஸல்) அவர்களிடமிருந்து ரிவாயத் செய்வதற்கும் அன்னாருக்கு கண்ணியம் கிடைத்தது. அன்னார் அஸ்வத் அன்ஸீயை கொலை செய்த நபர்களைச் சார்ந்தவர் ஆவார். மேலும், அம்ர் பின் மஃதீ கரிப் அவர்களின் மருமகனாக இருந்தார். அன்னார் ஏமனில் முர்தத் ஆன மக்களைச் சார்ந்தவராக இருந்தார். ஆனால், பிற்காலத்தில் இஸ்லாத்தின் பக்கம் திரும்பி வந்துவிட்டார். ஈராக் வெற்றி மற்றும் காதிஸியா போர் ஆகியவற்றில் அன்னாரின் பெயர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அன்னார் நஹாவந்த் போரிலும் பங்குபெற்றிருந்தார்கள். ஸிஃப்பைன் போரில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் இருக்கும்போது ஷஹீதாகிவிட்டார். ஜிஷ்னஷ் தய்லமி கூறுகின்றார்கள்: நாங்கள் கைஸிற்கு இஸ்லாத்திற்கான அழைப்பு கொடுத்தோம். அவருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை எட்டவைத்தோம். அப்போது, நாங்கள் விண்ணிலிருந்து இறங்கி வந்ததைப் போன்று அவர்கள் உணர்ந்தனர். எனவே அவர் உடனடியாக எமது கூற்றை ஏற்றுக் கொண்டுவிட்டார். இவ்வாறு நாங்கள் ஏனைய மக்களுக்கும் கடிதங்கள் எழுதினோம். பல்வேறு கோத்திரங்களின் தலைவர்களும் அஸ்வதிற்கு எதிராக போரிடுவதற்கு தயாராகிவிட்டார்கள். அவர்கள் கடிதங்கள் மூலமாக எங்களிடம் உதவிக்கான வாக்குறுதி வழங்கினார்கள். நாம் இறுதி முடிவு எடுத்து அவர்களுக்கு பதிலடி கொடுக்காதவரை நீங்கள் உங்களது இடத்தை விட்டு அசைய வேண்டாம். ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து தூதுச் செய்தி கிடைத்ததன் காரணமாக அஸ்வதிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பது அவசியமானதாக இருந்தது என்று நாங்கள் பதில் எழுதினோம்.

இதேபோன்று, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நஜ்ரானின் அனைத்து குடிமக்களுக்கும் அஸ்வத் அன்ஸீயின் விவகாரம் தொடர்பாக கடிதம் எழுதினார்கள். அவர்கள் அன்னாரின் கூற்றை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். இந்த தகவல் அஸ்வதிற்கு கிடைத்தபோது, அவனுக்கு தனது அழிவு தென்பட்டது.

ஜிஷ்னஷ் தய்லமி கூறுகின்றார்கள்: எனக்கு ஒரு திட்டம் தோன்றியது. நான் அஸ்வதின் மனைவி ஆஸாதிடம் சென்றேன். அவர் ஷஹ்ரா பின் பாஸானின் விதவை மனைவியாக இருந்தார்.

அஸ்வத், ஷஹ்ரா பின் பாஸானை கொலை செய்த பிறகு அவரை பலவந்தமாக திருமணம் செய்திருந்தான். அஸ்வதின் கைகளால் அவரது முதலாவது கணவர் ஹஸ்ரத் ஷஹ்ரா பின் பாஸான் (ரலி) ஷஹீதாக்கப்பட்டது மற்றும் அவரது குடும்பத்தின் ஏனைய நபர்களுக்கு ஏற்பட்ட அழிவு, மேலும் குடும்பத்திற்கு ஏற்பட்ட இழிவு மற்றும் அநீதிகளை அவருக்கு நினைவூட்டினேன். அஸ்வதிற்கு எதிராக தமக்கு உதவி செய்யும்படி நான் கூறினேன். அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் தயாராகிவிட்டார். அவர் கூறினார்:

இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ்வின் அனைத்து படைப்பினங்களிலும் நான் அஸ்வதை மிக மோசமான படைப்பாக கருதுகிறேன். அவன் அல்லாஹ்வின் எந்த ஒரு உரிமையையும் மதிப்பதில்லை. மேலும், விலக்கப்பட்ட எந்த ஒரு விஷயத்திலிருந்தும் விலகுவதில்லை. எனவே நீங்கள் எண்ணம் கொண்ட பிறகு எனக்கு கூறவும். நான் அந்த விவகாரத்தில் திட்டம் தீட்டுவேன்.

இறுதியில், ஒரு முழுமையான திட்டத்துடன் அஸ்வத் அன்ஸீயின் அதே மனைவியின் ஒத்துழைப்புடன் ஓர் இரவில் அந்த மாளிகையில் நுழைந்து அஸ்வத் அன்ஸீ கொல்லப்பட்டுவிட்டான். பொழுது விடிந்ததும், கோட்டையின் சுவரில் ஏறி நின்று, முர்த்தும் கிளர்ச்சியாளனுமாகிய அஸ்வத் தனது முடிவை எட்டிவிட்டான் என்று தனித்தன்மை வாய்ந்த குரல் எழுப்பப்பட்டது. அப்போது, முஸ்லிம்களும் காஃபிர்களும் கோட்டையைச் சுற்றி ஒன்று திரண்டுவிட்டனர். பின்னர் அவர்கள் ஸுப்ஹ் (தொழுகைக்கான) பாங்கு கொடுத்தார்கள். மேலும்,

اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ

என்று நான் கூறினேன்.

பொருள் : முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள். அஸ்வத் அன்ஸீ பொய்யன் ஆவான் என்று நான் சாட்சி கூறுகிறேன். பின்னர் அவனது தலையை அந்த மக்களுக்கு முன்னால் வீசிவிட்டேன். இவ்வாறு இந்தக் குழப்பம் மூன்று மாதங்கள் வரை சில கூற்றுகளின்படி சுமார் நான்கு மாதங்கள் வரை கிளர்ந்தெழுந்து பின்னர் தணிந்துவிட்டது. அனைத்து அதிகாரிகளும், அமீர்மார்களும் தத்தமது பகுதிகளில் வழக்கம்போல பணிகளில் மும்முரமாகிவிட்டார்கள். ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அந்த மக்களுக்கு இமாமத் செய்து வந்தார்கள். அஸ்வத் அன்ஸீயின் கொலை, அவனது படையின் தோல்வி மற்றும் அவனது குழப்பம் முடிவுக்கு வந்தது. இது தொடர்பான தகவல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், அது கிடைப்பதற்கு முன்னரே அன்னார் (ஸல்) அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள்.

இந்த அறிவிப்பும் உள்ளது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு, மரணத்திற்கு முன்னரே அஸ்வத் அன்ஸீயின் கொலை செய்யப்பட்ட தகவல் அதே இரவில் வஹீயின் மூலமாக

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அல்லாஹ் வழங்கிவிட்டான். எந்த இரவில் கொலை செய்யப்பட்டானோ அதே இரவில் தகவல் வழங்கிவிட்டான். எனவே அடுத்த நாள் காலை சஹாபிகளுக்கும் அந்த தகவலை தெரிவித்துவிட்டார்கள். மேலும் ஃபிரோஸ் அஸ்வதை கொன்றுவிட்டார் என்ற செய்தியையும் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கிலாஃபத் பதவியில் அமர்ந்த பிறகு அன்னார் (ரலி) அவர்களுக்கு கிடைக்கக் கூடிய முதல் நற்செய்தி அஸ்வத் அன்ஸீயின் கொலை செய்யப்பட்ட செய்தியாக இருந்தது. எந்த இரவில் அஸ்வத் அன்ஸீ கொலை செய்யப்பட்ட செய்தி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கிடைத்ததோ அந்த நாள் காலையில் அன்னார் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தது. மற்றோர் அறிவிப்பின்படி, அஸ்வத் கொலை செய்யப்பட்ட தகவலை கொண்டு வந்த நபர் மதீனாவிற்கு வந்தார். அப்போது, அந்நேரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

மற்றோர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்து பத்து பனிரெண்டு நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்ட பிறகு அஸ்வத் கொலை செய்யப்பட்ட செய்தி மதீனாவை வந்தடைந்தது. இது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. ஆனால், எவ்வாறு இருப்பினும் இது அதே நாட்களில் அதாவது எட்டு,பத்து நாட்களுக்கு முன்னர் அல்லது பின்னர் நிகழ்ந்த விஷயமாகும்.

அஸ்வதின் கொலைக்குப் பிறகு, ஸின்ஆவில் முன்னரைப் போன்று முஸ்லிம்களின் அரசாங்கம் நிலைபெற்றுவிட்டது. (அல் அஸாபா ஃபீய் தம்மீஸூஸ் ஸஹாபா தொகுதி-5, பக்கம் 404-405, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா 2005)

ஆனால், ஏமனில் ஒரு முறை மீண்டும் கிளர்ச்சி ஏற்பட்டது.

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மரணச் செய்தி குறித்து ஏமனில் சர்ச்சையானபோது, சீரான நிலைமை மீண்டும் மோசமாகிவிட்டது. ஃபைரூஸ் மற்றும் தாஸூவயாவுடன் சேர்ந்து கொண்டு கைஸ் பின் அப்தே யகூஸ் அஸ்வதிற்கு எதிராக கிளர்ச்சி செய்திருந்தார். அவர்களின் ஒத்துழைப்பால் அஸ்வதை அவர் கொலை செய்திருந்தார். தற்போது மீண்டும் இஸ்லாத்திற்கு விசுவாசமாக இருப்பதில் இருந்து அவர் விலகிவிட்டார். மிகவும் தகுதி வாய்ந்த மற்றும் உறுதிவாய்ந்த நபராக இருந்தார். சமுதாய உணர்வால் நிறைந்திருந்தார். ஏமனில் பாரசீகர்களின் ஆதிக்கம் அவருக்கு நெருடலை தந்து கொண்டிருந்தது. அவரின் முடிவிற்குப் பிறகு, அப்னாக்களின் மகிழ்ச்சி, அவர்களின் ஒருமைப்பாடு, மற்றும் பொருளாதார மேன்மை ஆகியவற்றை மண்ணோடு கலக்க வேண்டும் என்று விரும்பி வந்தார். ஏற்கனவே அவர் ஒரு வெற்றிகரமான இராணுவத் தலைவராக இருந்தார். அவர் அஸ்வதின் இராணுவப் படைத் தலைவர்களுடன் ஆலோசனை செய்தான். மேலும், அப்னாக்களை நாட்டை விட்டு வெளியேற்ற திட்டம் தீட்டியிருந்தார். ஃபைரோஸ் மற்றும் தாஸூவயாவுடன் அவர் தொடர்புகளை கெடுத்துக் கொண்டார். தாஸூவியாவை ஏமாற்றி கொலை செய்துவிட்டார். ஃபைரோஸ் கொலை செய்யப்படுவதிலிருந்து எப்படியோ தப்பித்துவிட்டார். ஃபைரோஸ் தமது மற்றும் அப்னாக்களின் நன்றி விசுவாசத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு தெரிவித்து, எங்களுக்கு உதவி செய்யுங்கள். நாங்கள் இஸ்லாத்திற்காக அனைத்து தியாகங்களுக்கும் நாங்கள் தயாராக உள்ளோம் என்று வேண்டினார். (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அரசாங்க கடிதங்கள், பக்கம் 60-61, பதிப்பு ஜாவித் பட் பிரஸ்)

எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது, ஹஸ்ர மௌத் பகுதிகளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அதிகாரி ஸய்யாது பின் வலீத் (ரலி) இருந்தார்கள். ஹஸ்ரத் ஸியாது பின் வலீத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் ஸியாது (ரலி) அவர்களின் ஒரு மகன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, மதீனாவிற்கு திரும்பி வந்தபோது அவர் வந்தவுடன் தமது கோத்திரம் பனூ பயாஸா வணங்கி வந்த சிலையை உடைத்துவிட்டார். பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மக்காவிற்கு சென்றுவிட்டார். அங்கேயே தங்கி வந்தார். இறுதியில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தார்கள். அப்போது அன்னாரும் ஹிஜ்ரத் செய்தார்கள். எனவே ஹஸ்ரத் ஸியாது முஹாஜிர் அன்சாரி என்றழைக்கப்படுகிறார். அன்னார் முஹாஜிராகவும், அன்சாராகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் ஸியாது (ரலி) பத்ர், உஹது, அகழ், உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்துள்ளார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தடைந்தார்கள். மேலும் பனூ பயாஸா கோத்திரத்தின் வீதியை கடந்து சென்றபோது, ஹஸ்ரத் ஸியாது (ரலி) அவர்கள், அஹ்லன் வ ஸஹ்லன் என்று கூறினார்கள். மேலும், தங்குவதற்கு தமது வீட்டை கொடுப்பதற்கு முன்வந்தார்கள். அப்போது, எனது ஒட்டகத்தை சுதந்திரமாக விட்டுவிடுங்கள். அது சுயமே வீட்டைத் தேடிக் கொள்ளும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு முஹர்ரம் மாதம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சதகா மற்றும் ஸகாத் வசூல் செய்வதற்காக தனித்தனியாக கணக்காளர்களை நியமித்தபோது, ஹஸ்ரத் ஸியாது (ரலி) அவர்களை ஹஸ்ர் மௌத் பகுதியின் கணக்காளராக நியமித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலம் வரை அன்னார் (ரலி) அவர்கள் அதே தொண்டில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அந்த பதவியிலிருந்து விலகிய பிறகு, அன்னார் (ரலி) கூஃபாவில் குடியேறிவிட்டார்கள். மேலும், அங்கேயே ஹிஜ்ரி 31ஆம் ஆண்டில் மரணமடைந்தார்கள். (அத்தப்காதுல் குப்ரா தொகுதி 3, பக்கம் 302, பதிப்பு தாரே அஹ்யாஉத் தராஸூல் அரபி பெய்ரூத் 1996)

அடுத்து, ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் நஜ்ரானை நோக்கி புறப்பட்டது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் உருவாக்கப்பட்ட 11 படைகளில் எல்லாரையும் விட கடைசியாக ஹஸ்ரத் முஹாஜிர் பின் உமையா (ரலி) அவர்களின் படை மதீனாவிலிருந்து ஏமனை நோக்கி புறப்பட்டது. அன்னாருடன் முஹாஜிர் மற்றும் அன்சார் சஹாபிகளின் ஒரு படையும் இருந்தது. அந்தப் படை மக்காவைக் கடந்து சென்றபோது, அத்தாப் பின் உஸைதின் சகோதரர் மக்காவின் அமீரான காலித் பின் உஸைதும் இணைந்து கொண்டார்கள். அந்தப் படை தாயிஃப் நகரத்தை கடந்து சென்றபோது, அப்துர் ரஹ்மான் பின் அபீ அல் ஆஸ் தமது தோழர்களுடன் அந்தப் படையில் இணைந்து கொண்டார்.

அதேபோன்று, வழியில் பல்வேறு கோத்திரங்களின் மக்கள் அன்னாரின் படையில் இணைந்து கொண்டு சென்றார்கள். (தாலிப் ஹாஷிமி அவர்களின் ஐம்பது சஹாபிகள் எனும் நூல், பக்கம் 557-559, அல்பத்ர் பப்ளிகேஷன்ஸ் லாஹூர்)

அம்ர் பின் மஃதீ கரிப் மற்றும் கைஸ் பின் மல்சூஹ் ஆகியோர் கைது

செய்யப்பட்டது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது போன்று, அம்ர் பின் மஃதீ கரிப் தனது துணிச்சல் மற்றும் ஆற்றலுடன் தமது வட்டத்தில் இஸ்லாமிய அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்ய தொடங்கிவிட்டான். கைஸ் பின் அப்தே யகூஸையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். இந்த இரண்டு நபர்களும் எல்லா கோத்திரங்களிடமும் சென்று முஸ்லிம்களுக்கு எதிராக அவர்களைத் தூண்டிவிட்டு கிளர்ச்சியை அதிகப்படுத்தும்படி ஆர்வமூட்டி வந்தனர். அதன் விளைவு என்னவாயிற்று என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அன்பிற்குரிய உடன்படிக்கை செய்து கொண்ட நஜ்ரானின் கிறித்துவ குடிமக்களைத் தவிர, (அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்திலும் தமது உடன்படிக்கையில் முறையாக நிலைபெற்றிருந்தார்கள்.) மற்ற அனைத்து கோத்திரங்களும் அம்ர் பின் மஃதீ கரிபுடன் இணைந்து கொண்டன. மேலும், முஸ்லிம்களுக்கு எதிராக எழுந்து நின்றன. இறைவனின் வல்லமை எப்படி வெளிப்பட்டது என்றால், ஏமன் வாசிகளுக்கு ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களுடன் ஒரு பெரும் படை வருகிறது என்ற தகவல்கள் கிடைக்கத் துவங்கியபோது நம்மால் ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களின் படைக்கு முன்னால் நிலை நிற்க முடியுமா! என்ற ஐயத்தில் ஏமன் வாசிகள் மூழ்கிவிட்டனர். அந்த மக்கள் அதே நிலைமையில் இருந்தனர். அப்போது அவர்களின் தலைவர்களான கைஸ் மற்றும் அம்ர் பின் மஃதீ கரிப் ஆகியோருக்கிடையில் பிளவு ஏற்பட்டுவிட்டது. அவர்கள் இருவரும் ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களை எதிர்கொள்வதற்கு உடன்படிக்கை செய்து கொண்டதற்கு பிறகும் கூட ஒருவர் மற்றவருக்கு பாதிப்பை ஏற்படுத்த முயற்சி செய்வதில் மும்முரமாகிவிட்டனர். மேலும், இறுதியில் அம்ர் பின் மஃதீ கரிப் முஸ்லிம்களுடன் இணைந்து கொள்வதற்கு முடிவு எடுத்துவிட்டார். ஓர் இரவில் அவர் தமது நபர்களுடன் சென்று கைஸின் வீட்டில் தாக்குதல் நடத்தினார். மேலும், அவனை கைது செய்து ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களுக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்திவிட்டார். ஆனால், ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் கைஸை கைது செய்வதுடன் மட்டும் நின்றுவிடவில்லை.

மாறாக, அவருடன் அம்ர் பின் மஃதீ கரிபையும் கைது செய்துவிட்டார்கள். அவர்கள் இருவரின் நிலைமைகளையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள். அவர்கள் இருவரையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்துவிட்டார்கள்.

கைஸ் மற்றும் அம்ர் பின் மஃதீ கரிப் ஆகியோர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கொண்டுவரப்பட்டனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நீ அல்லாஹ்வின் அடியார்கள் மீது அநீதியிழைத்தவாறு அவர்களை கொலை செய்து வந்தாயா? நீ நம்பிக்கையாளர்களை விட்டுவிட்டு இணைவைப்பாளர்கள் மற்றும் முர்தத்களை நண்பர்களாக்கி கொண்டாயா? என்று கைஸிடம் கேட்டார்கள். கைஸ் தாஃவயாவைக் கொலை செய்ய சதி செய்தது மற்றும் அதில் பங்குபெற்றது ஆகியவற்றிலிருந்து தெளிவாக மறுத்துவிட்டார். அது எப்படிப்பட்ட விவகாரமாக இருந்தது என்றால், மிகவும் இரகசியமாக நிறைவேற்றப்பட்டிருந்தது. அது தொடர்பாக கைஸிற்கு எதிராக எந்த தெளிவான ஆதாரமும் கிடைக்கவில்லை. ஆதாரம் எதுவும் இல்லாமல்போனதால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவனை கொலை செய்ய மறுத்துவிட்டார்கள். மேலும், அவனை விட்டுவிட்டார்கள். பின்னர் மற்றவரின் முறை வந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அம்ர் பின் மஃதீ கரிபிடம் நீ இழிவை உணரவில்லையா? அதாவது, நீ ஒவ்வொரு நாளும் தோற்கின்றாய். அல்லது உம்மை சுற்றி கடினமான சூழல் சூழ்ந்திருக்கின்றது. நீர் இந்த மார்க்கத்திற்கு உதவி செய்தால் பின்னர் அல்லாஹ் உமக்கு உயர்ந்த படித்தரங்களை வழங்குவான்.

பின்னர் அன்னார் (ரலி), அவரையும் விடுதலை செய்துவிட்டார்கள். அவர்கள் இருவரையும் அதாவது கைஸ் மற்றும் அம்ர் பின் மஃதீ கரிப் ஆகியோரை அவர்களின் சமுதாயத்திடம் ஒப்படைத்துவிட்டார்கள். அப்போது, அம்ர் இவ்வாறு கூறினார்: அதாவது, நிச்சயமாக இனி நான் அமீருல் மூஃமினீன் அவர்களின் அறிவுரையை கண்டிப்பாக ஒப்புக் கொள்வேன். மேலும், ஒருபோதும் இந்த தவறை மீண்டும் நான் செய்ய மாட்டேன். (தாரீகுத் தபரி தொகுதி 2 பக்கம் 299 பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

தெளிவான ஆதாரங்கள் இல்லை என்பதாலும், இருவரையும் அவர்களின் தலைமைத்துவத்தின் காரணமாகவும், அவர்களின் அறிவின் காரணமாகவும் மன்னித்துவிட்டார்கள். அவர்கள் இருவரையும் மன்னித்ததை குறிப்பிட்டவாறு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொடர்பாக வாழ்க்கை வரலாற்றை எழுதுகின்ற நபர் ஒருவர் இவ்வாறு எழுதியுள்ளார்: அபூபக்ர் மிகவும் தொலைநோக்கு பார்வை கொண்டவரும், ஆழமான அகப்பார்வைக்கு சொந்தக்காரரும், விளைவின் மீது முழுமையான பார்வை கொண்டவரும் ஆவார்.

எங்கு கடினம் காட்டுவதற்கான அவசியம் இருக்குமோ அங்கு கடினம் காட்டுவார்கள். எங்கு மன்னிப்பு மற்றும் கண்டும் காணாமல் இருப்பதற்கு அவசியம் இருக்குமோ அங்கு மன்னிப்பையும், கண்டும் காணாமல் இருத்தலையும் கைகொள்வார்கள். கோத்திரங்களின் பிரிந்து கிடக்கும் மக்களை இஸ்லாத்தின் கொடியின் ஒன்று சேர்ப்பதில் பேரார்வமும், விருப்பமும் கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களின் நுட்பமான அரசியல் இவ்வாறு இருந்தது. அதாவது, எதிர் அணியில் இருந்த கோத்திரங்கள் உண்மையின் பக்கம் திரும்பி வந்த பிறகு, அவர்களை மன்னித்து வந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் முர்தத் கோத்திரங்களை கீழ்படியச் செய்தநேரத்தில் இஸ்லாமிய அரசாங்கத்தின் வெற்றி, முஸ்லிம்களின் கண்ணியம் மற்றும் வெற்றியின் ஆற்றல் மற்றும் அவர்களின் மகத்துவத்தின் முன்னேற்பாடுகளை வெளிப்படுத்திக் காட்டினார்கள். அதனை கோத்திரங்கள் ஒப்புக் கொண்டன. மேலும் இஸ்லாமிய அரசாங்கத்திற்கு கட்டுப்படுவதை ஏற்றுக் கொண்டு விட்டன.மேலும் தூதரின் கலீஃபாவிற்கு கட்டுப்படுவதை ஏற்றுக் கொண்டுவிட்டனர். அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த கோத்திரங்களின் உள்ளங்களை ஈர்க்க வேண்டும் என்று விரும்பினார்கள். மேலும், கடினத்திற்குப் பகரமாக மென்மை மற்றும் பரிவுடன் நடப்பதை உகந்ததாக கருதினார். எனவே அவர்களின் தண்டனையை ரத்து செய்தார். மேலும் அவர்களுடன் மென்மையுடன் உரையாடினார். மேலும் கோத்திரங்களுக்குள் அவர்களின் ஆழமான தாக்கங்களை இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் நன்மைக்காக பயன்படுத்தினார். அன்னார் (ரலி) அவர்கள் அந்த மக்களின் குற்றங்களை மன்னித்துவிட்டார்கள். அந்த மக்களுடன் அழகிய முறையில் நடந்து கொண்டார்கள். கைஸ் பின் அப்தே யகூஸ் மற்றும் அம்ர் பின் மஃதீ கரிப் ஆகியோருடன் அவ்வாறே நடந்து கொண்டார்கள். அவர்கள் இருவரும் அரேபியாவின் வீரர்களையும்,

அறிஞர்களையும் சார்ந்தவர்களாக இருந்தனர். அவர்களை வீணாக்குவதை அபூபக்ர் (ரலி) உகந்ததாக கருதவில்லை. அவர்களை இஸ்லாத்திற்கு உரியவர்களாக ஆக்கவேண்டும் மேலும் மார்க்கப் புறக்கணிப்பிலிருந்து அவர்களை வெளியேற்றி இஸ்லாத்தின் பக்கம் அவர்களை கொண்டு வரவேண்டும் என்பதற்காக அன்னார் (ரலி) அவர்கள் முயற்சி செய்தார்கள். அபூபக்ர் (ரலி), அம்ர் பின் மஃதீ கரிபை விடுதலை செய்துவிட்டார்கள். அடுத்து அந்த நாளுக்குப் பிறகு ஒருபோதும் அம்ர் முர்தத் ஆகவில்லை. மாறாக, இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார். மேலும் நல்ல முஸ்லிமாக திகழ்ந்து வாழ்க்கையை கழித்தார். அல்லாஹ் அவருக்கு உதவி செய்தான். மேலும் அவர் இஸ்லாமிய வெற்றிகளில் முக்கியப் பங்கு ஆற்றினார். கைஸும் தாம் செய்தவற்றின் மீது மிகவும் வெட்கம் கொண்டார். அபூபக்ர் (ரலி) அவரையும் மன்னித்துவிட்டார்கள். அரேபியாவின் அந்த இரண்டு தீயவர்களை மன்னித்ததன் காரணமாக மிகவும் தொலை தூர தாக்கங்கள் ஏற்பட்டன. முர்தத் ஆன பிறகு,அச்சம் அல்லது பேராசையின் காரணமாக இஸ்லாத்திற்கு திரும்பிய அந்த மக்களின் உள்ளங்களை அபூபக்ர் (ரலி) இணைத்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அஷ்அஸ் பின் கைஸையும் மன்னித்துவிட்டார்கள். இவ்வாறு சித்தீக் (ரலி) அவர்கள், அவர்களின் உள்ளங்களை வசப்படுத்திக் கொண்டார்கள். மேலும், அவர்களின் உள்ளங்களின் எஜமானராகிவிட்டார்கள். எதிர்காலத்தில் இந்த மக்கள் இஸ்லாத்தின் உதவிக்கும், முஸ்லிம்களின் வலிமைக்கும் காரணியாக அமைந்தார்கள்.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபியின் உருது மொழியாக்க நூல்: ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக்(ரலி), பக்கம் 313-314)

அதாவது எந்த பலவந்தமும் செய்யப்படவில்லை. மாறாக, உள்ளத்தால் அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டனர். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர்(ரலி)அவர்களுக்கு கட்டுப்பட்டார்கள்.

ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் நஜ்ரானிலிருந்து லஹ்ஜிய்யஃ பகுதியை நோக்கி புறப்பட்டார்கள். குதிரை சவாரி வீரர்கள் அந்த மக்களின் கூட்டத்தினரை சுற்றிவளைத்தனர். அப்போது, அவர்கள் அடைக்கலம் வேண்டினர். ஆனால், ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள், அந்த மக்களுக்கு அடைக்கலம் கொடுக்க மறுத்துவிட்டார்கள். அதனால் மக்கள் இரண்டு கூட்டத்தினராக பிரிந்தனர். அவர்களில் ஒரு கூட்டத்தினருடன் அஜீப் எனும் இடத்தில் ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் போரிட்டார்கள். அஜீப் எனும் இடம் ஏமனில் உள்ள ஓர் இடமாகும். ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்களின் ஏனைய குதிரை சவாரி வீரர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களின் தலைமையின் கீழ் அஹாபஸ் எனும் இடத்தில் வழிப்பாதையில் அந்த மக்களை எதிர்கொண்டனர். தப்பி ஓடிய எதிரிகள் ஒவ்வொரு வழிப்பாதையிலும் கொலை செய்யப்பட்டனர்.

(தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம்294-295, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அவர்கள் ஸின்ஆ சென்றடைந்ததைக் குறித்து (இவ்வாறு) எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் முஹாஜிர் (ரலி) அஜீப் எனும் இடத்திலிருந்து புறப்பட்டார்கள். இறுதியில் ஸின்ஆ வந்தடைந்து விட்டார்கள். அப்போது அன்னார் (ரலி) அவர்கள் தப்பி ஓடிய பல்வேறு கோத்திரங்களை பின்தொடர்ந்து செல்வதற்கு கட்டளை வழங்கினார்கள். அவர்களில் கைது செய்தவர்களை முஸ்லிம்கள் கொலை செய்தனர். எந்த ஒரு வரம்பு மீறியவரையும் மன்னிக்கவில்லை. ஆயினும், வரம்பு மீறியவர்களைத் தவிர, தவ்பா செய்த மக்களின் தவ்பா ஏற்றுக் கொள்ளப்பட்டது. போர் செய்யக்கூடிய, அநீதியிழைக்கக் கூடியவர்களை மன்னிக்கவில்லை. ஆனால், மற்றவர்களை மன்னித்துவிட்டார்கள். அவர்களின் கடந்த கால நிலைமைகளுக்கு ஏற்ப அவர்களுடன் நடந்து கொள்ளப்பட்டது. அவர்களிடம் சீர்திருத்தத்திற்கான நம்பிக்கை இருந்தது.

(தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 299. பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

முந்தைய பயான் சிறிது விரிவானதாக இருந்தது. எனவே இந்த பயானை இங்கேயே நிறுத்துகிறேன். எஞ்சியவை அடுத்து எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் ஜுலை 26-ஆகஸ்ட் 8, 2022)

தமிழாக்கம் :
மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

*****

தஃப்ஸீரே கபீர் விளக்கவுரையின் தொடர்ச்சி

உரிமை உள்ளது. ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தவறிழைத்துவிட்டார்கள் என்று நாம் கூறமுடியாது. நவூதுபில்லாஹ் மின் ஸாலிக். திருக்குர்ஆனின் போதனை தொடர்பாக அன்னார் (ஸல்) அவர்கள் வழங்கிய தஃப்ஸீர் நமக்கு புரியவில்லையென்றாலும், அன்னார் (ஸல்) அவர்களின் விளக்கவுரையையே சரியானதாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

(தஃப்ஸீர் கபீர் தொகுதி 4, பக்கம் 218, காதியான் பதிப்பு 2010)

* * * * *

## 127 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 127 வது காதியான் ஆண்டு மாநாட்டினை 23,24,25 டிசம்பர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் பங்கு பெறும் நிய்யத்துடன் ஏற்பாடுகளை தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறுவதற்கான நற்பேறு வழங்குவானாக. மேலும் இந்த ஜல்ஸாவை எல்லா வகையிலும் வெற்றிகரமாக ஆக்குவானாக. மேலும் அது அருளுக்குரியதாக அமைவதற்கும், நல்ல ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்கும் தொடர்ந்து துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத்
மர்கஸியா, காதியான்)

## வருடாந்திர இஜ்திமாக்கள் 2022

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் லஜ்னா இமாயில்லாஹ் ஆகிய கிளை அமைப்புகளுக்கான இஜ்திமாக்களை 21, 22, 23 அக்டோபர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு பரிவுகூர்ந்து ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இதற்கேற்ப துஆக்கள் செய்தவாறு இந்த இஜ்திமாக்களில் பங்கு பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்.

(சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா,
பாரத்)

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 ஜூன் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு இஹ்ஸான் மாதம் **17ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி.......**

எனவே அவள் அந்த வரியைக் கூறிய உடனேயே அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீ ஒரு மிகப் பெரியவனை முன் வைத்துள்ளாய். அவனிடம் பாதுகாப்புத் தேடியுள்ளாய். அவன் மிக அதிகமாகப் பாதுகாப்பு அளிப்பவன் ஆவான். எனவே, நான் உனது விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

எனவே, அன்னார் (ஸல்) அவர்கள் உடனடியாக வெளியே வருகை தந்தார்கள். மேலும் கூறினார்கள்: அபூ ஹுஸைதே! அவளுக்கு இரண்டு போர்வையைக் கொடுத்து விடுவீராக! மேலும், அவளது குடும்பத்தாரிடம் விட்டுவிடுவீராக!

ஆகவே, அதற்குப் பிறகு அவளுக்கு மஹர் பணம் போக கூடுதலாக பெரும் நன்மை செய்யும் வகையில் இரண்டு ராஸ்க்கீ போர்வைகளை வழங்குமாறும் கட்டளையிட்டார்கள். வெள்ளையான, நீளமான, நூலால் நெய்யப்பட்ட மிக நல்ல போர்வைகளாக அவை இருந்தன.

திருக்குர்ஆனின் கட்டளை நிறைவேற வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்தார்கள். உறவு கொள்ளாமல் தலாக் கொடுக்கப்படும் பெண்கள் தொடர்பாக வசனம் உள்ளது. அன்னார் (ஸல்) அவர்கள், அவளுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டார்கள். அபூ உஸைத் அவர்களே, அவளது வீடு வரை அவளை விட்டுவிட்டு வந்தார்கள். அவளது கோத்திரத்து மக்களால் இந்த விஷயத்தை பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்தது. அவர்கள் அவளைப் பழித்துரைத்தார்கள்.

ஆனால், அவள் இது என்னுடைய துர்பாக்கியம் ஆகும் என்றே பதில் கூறி வந்தாள். அவள், நான் வழிகெடுக்கப்பட்டேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உன்னிடம் வரும்போது, நீ விலகிப் போய் விடு! வெறுப்பை வெளிப்படுத்து! இவ்வாறு அன்னார் (ஸல்) மீது உனது மதிப்பச்சம் ஏற்பட்டுவிடும் என்று என்னிடம் கூறப்பட்டது என்றும் சில முறை அவர் கூறிவந்தார். இதுதான் காரணமா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என்று தெரியவில்லை. எவ்வாறு இருப்பினும், அவள் வெறுப்பை வெளிப்படுத்தினாள். எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவளை விட்டு விலகிவிட்டார்கள். மேலும், அவளுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

ஹஸ்ரத் உஸைது (ரலி) எனும் ஒரு சஹாபியின் குறிப்பில் இதை நான் முன்னரும் கூறியிருக்கிறேன். எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் குந்தா மற்றும் ஹஸ்ர மௌத்திலிருந்து ஏமன் மற்றும் மக்காவின் வழியாக திரும்பி வந்தார்கள். அவர்கள் மதீனா வந்தடைந்ததும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவருக்கு காலித் பின் ஸையீதிற்கு உதவி செய்வதற்காக புறப்படுமாறு கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் முர்தத்களுக்கு எதிராகத் தம்முடன் போர்களில் கலந்து கொண்டிருந்த தமது படைக்கு விடுப்பு கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்களுக்குப் பகரமாக வேறு ஒரு படையைத் தயார் செய்தார்கள். மிகப் பெரும் போர்களை செய்து வந்துள்ளீர்கள். இப்பொழுது, நீங்கள் களைத்துப் போயிருப்பீர்கள் என்று கூறி விடுப்பு வழங்கிவிட்டார்கள்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வேறொரு படையைத் தயார் செய்தார்கள்.

இக்ரிமாவின் கொடியின் கீழ் சிரியாவுக்கு புறப்படுமாறு அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். அங்கு ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் வெளிப்படையாகத் தெரிகின்ற சிறப்புப் பணிகளை செய்தார்கள். மேலும், மிகவும் வீரத்தோடு சண்டையிட்டவாறு ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள். இதன் விளக்கம் சிரியாவின் போர்களில் எடுத்துரைக்கப்பட்டுவிடும். இன்ஷா அல்லாஹ்.

அடுத்து, ஐந்தாவது போர்ப்படையானது, கிளர்ச்சியாளர்களான முர்தத்களுக்கு எதிரான ஹஸ்ரத் ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களின் படைக் குழுவாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இக்ரிமா அவர்களை முஸைலமாவை நோக்கி,யமாமா பகுதிக்கு அனுப்பினார்கள். அவர்களுக்குப் பின்னால் ஹஸ்ரத் ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களையும் யமாமாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களின் சுருக்கமான அறிமுகம் இவ்வாறு உள்ளது:

ஹஸ்ரத் ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களின் தந்தையார் பெயர் அப்துல்லாஹ் பின் முதாஃ ஆகும். தாயார் பெயர் ஹஸனா ஆகும். சிலர் அன்னாரை குந்தீ கோத்திரத்தினர் என்றும், சிலர் தமீமீ கோத்தரத்தைச் சார்ந்தவர் என்றும் கூறுகிறார்கள். அன்னாரின் தந்தையார், ஷரஹ்பீல் அவர்களின் குழந்தைப் பருவத்திலேயே மரணமடைந்துவிட்டார்கள். அன்னார் தமது தாயாரின் ஹஸனா என்ற பெயரால் ஷரஹ்பீல் பின் ஹஸனா என்று அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் தமது சகோதரர்களுடன் அபீஸினியாவுக்கு ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். அபீஸீனியாவிலிருந்து திரும்பி வந்த பிறகு, மதீனாவில் அன்னார் பனூ ஸரீக் உடைய வீடுகளில் தங்கினார்கள். கிலாஃபத்தே ராஷிதாவில் அன்னார் புகழ்பெற்ற படைத் தளபதிகளில் ஒருவராக இருந்தார்கள். ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டில் 67 வயதில் அம்வாஸ் எனும் பிளேக் நோயால் மரணமடைந்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று இக்ரிமா அவர்கள் ஷரஹ்பீல் வந்தடையும் முன்னர் போர் புரியக் கூடாது என்ற ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளை இருந்தும், அவசரப்பட்டார்கள். மேலும், வெற்றி வாகை அவர்களின் தலையில் சூட்டப்படவேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்கள் வருவதற்கு முன்னரே முஸைலமா மீது தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். இருப்பினும், முஸைலமா, அன்னாரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டான். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் அந்தத் தோல்வியைப் பற்றிய தகவலை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குக் கொடுத்தபோது, ஏற்கனவே கூறப்பட்டதுபோல ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு எச்சரிக்கை கடிதம் எழுதினார்கள்.

மேலும், இந்தத் தோல்வியின் வடுவை எடுத்துக் கொண்டு மதீனாவிற்கு வராதீர்கள். மக்களிடம் கோழைத்தனம் பரவி விடப் போகிறது என்று கூறினார்கள்.

மேலும், ஓமன் செல்லுமாறு அன்னாருக்கு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) தற்போது வழியிலேயே இருந்தார்கள். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களின் தோல்வியைப் பற்றிய செய்தி அன்னாருக்குக் கிடைக்கப் பெற்றது. அன்னார் முன்னோக்கி செல்வதை நிறுத்திவிட்டார்கள். மேலும், புதிய வழிகாட்டல்களுக்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், எங்கே

இருக்கின்றீர்களோ அங்கேயே தங்கியிருங்கள் என்று எழுதி அன்னாருக்கு அனுப்பினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்:

எனது மறுகட்டளை வரும் வரை நீங்கள் யமாமாவுக்கு அருகிலேயே தங்கி இருங்கள். மேலும், எந்த மனிதனோடு அதாவது முஸைலமாவோடு போர் புரிய நீங்கள் அனுப்பப்பட்டுள்ளீர்களோ தற்போது அவனோடு போர் புரியாதீர்கள்.

பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை யமாமாவின் போருக்காக நியமித்தபோது, ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் உங்களோடு வந்து இணையும் போது, நீங்கள் யமாமா போரிலிருந்து முழுமையாக விடுபட்ட பிறகு, குஸாஆ கோத்திரத்தை நோக்கி பயணமாகுங்கள். மேலும், ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களோடு இணைந்து, இஸ்லாத்தை ஏற்க மறுத்து அதை எதிர்த்துப் போரிடுவதற்கு கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் அந்த மக்களுக்குத் தண்டனை வழங்குங்கள். மறுப்பது மட்டும் இல்லை. அதற்கும் மேலாக அவர்கள் எதிர்த்து போரிடவும் செய்தார்கள்.

குஸாஆ என்பதும் அரேபியாவின் ஒரு புகழ்பெற்ற கோத்திரமாக இருந்தது. அது மதீனாவிலிருந்து 10 வழித் தடங்கள் தூரத்தில் வாதியுல் குறாவைத் தாண்டி மதாயின் சாலிஹ் உடைய மேற்கில் அமைந்திருந்தது. எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் வழிகாட்டல் படி ஹஸ்ரத் ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்கள் தமது படைகளுடன் காத்திருந்தார்கள். ஆயினும், முஸைலமா அன்னார் மீது தனது படையைக் கொண்டு தாக்குதல் தொடுத்துவிட்டான். இதைப் பற்றிக் கூறியவாறு எழுத்தாளர் ஒருவர் இவ்வாறு எழுதுகிறார்:

தற்போது, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் யமாமா செல்லும் வழியில் தான் இருந்தார்கள். முஸைலமாவின் படை ஹஸ்ரத் ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களின் படையுடன் போரிட்டது. மேலும், அதைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. சில வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

அதற்கு முன்னர், அவர்களின் முன்னோடி ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் செய்த அதே தவறைத் தான் ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்களும் செய்தார்கள். அதாவது, முஸைலமாவை வெற்றிக் கொண்ட அந்தஸ்தைத் தாம் பெறுவதற்கான ஆர்வத்தில் முன்னால் சென்றார்கள். ஆனால், அன்னாரும் தோல்வியைத் தழுவி பின்வாங்க நேரிட்டது. ஆனால், நடந்தது அதுவல்ல. மாறாக, யமாமாவின் படையினரே, ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களோடு இணைந்து தங்களுக்கு இழப்பு ஏதும் ஏற்படுத்தி விடப்போகிறார்கள் என்று நினைத்தார்கள்.

எனவே, முஸைலமாவின் படை முன்னால் வந்து அன்னாரின் படை மீது தாக்குதல் நடத்திவிட்டது. மேலும், தோற்கடித்து அன்னாரை பின்னுக்குத் தள்ளுவதில் வெற்றி கண்டுவிட்டது. இரண்டில் ஒன்று நடந்திருக்கும். ஆனால், ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்கள் தமது படையுடன் பின்வாங்கிவிட்டார்கள் என்பது தான் உண்மை. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை சென்றடைந்ததும், அனைத்து நிலைமைகள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றி தெரிய வந்ததும் அன்னார் ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்களிடம் கடிந்து கொண்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், எதிரியுடன் மோதுவதற்கான முழு ஆற்றல் இல்லையென்றால், தேவைப்படும் ஆற்றல் கிடைக்கும் வரை ஆற்றல் இல்லாத நிலையிலும், எதிரியுடன் போர்புரிவதற்கு பகரமாக, அதனால் தோல்வியைத் தழுவ நேரிடுவதற்குப் பகரமாக,போரிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று எண்ணினார்கள்.

எவ்வாறு இருப்பினும், பின்னர் ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுடன் போரில் கலந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்களை முகத்தமா அல்ஜைஷ் எனும் இடத்தில் கண்காணிப்பாளராக நியமித்தார்கள். அதாவது, படையில் முன்னணிப் பகுதிக்கு அன்னாரைக் கண்காணிப்பாளராக நியமித்தார்கள். மேலும், வலப்புற மற்றும் இடப்புற படைகளில் ஸைத் பின் கத்தாப் (ரலி) அவர்களையும் அபூ ஹுஸைஃபா பின் அத்பா பின் ரபீ (ரலி) அவர்களையும் நியமித்தார்கள். யமாமா போரிலிருந்து வெளிவந்த பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்கள் பனூ குஸாஆவுடைய கிளர்ச்சியாளர்களுக்கு தண்டனை வழங்குவதற்காக ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுடன் சென்று இணைந்தார்கள். ஆக, எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களும் குஸாஆவின் கிளர்ச்சியாளர்களான முர்தத்கள் மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஸைது மற்றும் பலக் ஆகிய கோத்திரத்தின் மீதும் அதற்குக் கீழிருந்த கோத்திரத்தின் மீதும் தாக்குதல் தொடுத்தார்கள்.

ஆறாவது போர்ப் படையானது, கிளர்ச்சியாளர்களான முர்தத்களுக்கு எதிரான ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் படைக் குழுவாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு கொடியை ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். மேலும் அன்னாரை குஸாஆ, வதீஆ மற்றும் ஹாரிஸ் ஆகியவற்றை எதிர்கொள்வதற்காக அனுப்பினார்கள். குஸாஆவும் கூட அரேபியாவின் ஒரு பிரசித்திப் பெற்ற கோத்திரம் ஆகும். அது மதீனாவிலிருந்து 10 வழியிடைப்படிகள் தூரத்தில் வாதியுல் குறாவைத் தாண்டி மதாயினுஸ் சாலிஹிற்கு மேற்கில் வசிக்கிறது.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் சுருக்கமான அறிமுகம் பின்வருமாறு: அன்னாரின் பெயர் அம்ர் ஆகும். புனைப் பெயர் அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ்வாக அல்லது சிலரது பார்வையில் அபூ முஹம்மது ஆக இருந்தது. அன்னாரின் தந்தையார் பெயர் ஆஸ் பின் வாயில் ஆகும்.

அன்னாரின் தாயார் பெயர் நாபிகா பின்த் ஹர்மலா ஆகும். ஓர் அறிவிப்பின்படி அன்னாரின் தாயாரின் உண்மையான பெயர் சல்மா ஆகும். நாபிகா அன்னாரின் பண்புப் பெயர் ஆகும்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு மக்கா வெற்றிக்கு ஆறு மாதங்களுக்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 8ஆம் ஆண்டு அன்னாரை ஓமனின் அதிகாரியாக நியமித்தார்கள். அன்னார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணம் வரை அதே பதவியில் இருந்தார்கள். அதற்குப் பிறகு, அன்னார் சிரியாவின் வெற்றிகளில் கலந்துகொண்டார்கள். மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் பாலஸ்தீனத்தின் அதிகாரியாக இருந்தார்கள். அன்னாரின் சிறந்த பணிகளில் தெளிவாகத் தெரியும் ஒரு சிறப்புப் பணி எகிப்தின் வெற்றியாகும்.

எகிப்து வெற்றி கண்ட பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரை எகிப்தின் அதிகாரியாக ஆக்கிவிட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் எகிப்தின் ஆளுமை பதவியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். பிறகு, பாலஸ்தீனத்தில் தனிமையை மேற்கொண்டார்கள். அமீர் முஆவியா அவர்கள் அன்னாரை மீண்டும் எகிப்தின் அதிகாரியாக ஆக்கினார்கள். மரணம் வரை அன்னார் அந்த தொண்டிலேயே நிலைபெற்றிருந்தார்கள்.

அன்னாரின் மரணம் ஹிஜ்ரி 43ஆம் ஆண்டு நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. சிலரது பார்வையில் ஹிஜ்ரி 47ஆம் ஆண்டு நிகழ்ந்தது. சிலர் 48ஆம் ஆண்டு என்று கூறுகின்றனர். சிலர் ஹிஜ்ரி 51ஆம் ஆண்டு என்று கூறுகிறார்கள். ஆனால், பொதுவாக ஹிஜ்ரி 43ஆம் ஆண்டு மரணமடைந்ததாகக் கூறப்படும் கூற்று

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 11 August 2022 Issue No. 32

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

சரியானதாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் மிகவும் அழகாகவும், இனிமையாக பேசக்கூடிய பேச்சாளராகவும் இருந்தார்கள். பேச்சாற்றல் பெற்ற அறிவுரையாளராக இருந்தார்கள். அரசியல் அறிந்தவராகவும், போர் வீரராகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் போர்த் திட்டங்களில் அன்னார் மீது நம்பிக்கை வைத்து வந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள், அன்னாரின் மகன் அப்துல்லாஹ் மற்றும் உம்மு அப்தில்லாஹ் ஆகியோரைக் கொண்ட குடும்பம் சிறந்த குடும்பமாகக் கூறப்பட்டுள்ளது. ஓர் எழுத்தாளர் எழுதுகிறார்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தயார் செய்ய வைத்த 11 கொடிகளில் ஒரு கொடி ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்காகவும் இருந்தது. அன்னார் (ரலி) அவர்களிடம் குஸாஆவின் முர்தத்களோடு போர் புரியும் பொறுப்பை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒப்படைத்திருந்தார்கள்.

ஏனெனில், அன்னார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்நாளிலும் ஸாத்துஸ் போரில், குஸாஆ கோத்திரத்துடன் போர் புரிந்துள்ளார்கள். மேலும், அந்தக் கோத்திரத்தின் எல்லா நிலைமைகள் பற்றியும் அனைத்து வழிகள் பற்றியும் நன்றாக அன்னார் (ரலி) அறிந்திருந்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களிடம் ஒரு தப்லீக் கடிதம் கொடுத்து ஹிஜ்ரி 8ஆம் ஆண்டு ஸுல் ஹஜ்ஜா மாதத்தில் ஜுலந்தியாவின் மகன்களான ஜேஃபர் மற்றும் அப்பாது எனும் இரண்டு தலைவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். இந்தத் தூது செல்லுதல் மிகவும் வெற்றிகரமானதாக இருந்தது. ஓமன் வாசிகள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் கையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மனதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் அன்னாரை ஓமனிலேயே ஸகாத் வசூல் செய்யும் பணியில் நியமித்துவிட்டார்கள்.

அன்னார் ஓமனிலேயே தங்கி இருந்தபோது, அன்னாருக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கடிதத்தின் மூலமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்த செய்தி கிடைத்தது. அன்னார் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, அரபு நாட்டின் பெரும்பாலான கோத்திரங்கள் முர்தத் ஆகிவிட்டன. அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை ஓமனிலிருந்து வருமாறு கூறினார்கள். எனவே அன்னார், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வழிகாட்டலை செயல்படுத்திய வண்ணம் ஓமனிலிருந்து மதீனாவுக்கு வந்துவிட்டார்கள்.

முர்தத் ஆகும் குழப்பத்தையும், கிளர்ச்சியையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் 11 அமீர்மார்களை நியமித்தார்கள். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஷரஹ்பீல் ஹஸனா (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டிருந்தார்கள்.

நீங்கள் யமாமா போரிலிருந்து முழுமையாக வெளிவந்த பிறகு, குஸாஆ கோத்திரத்தை நோக்கிச் செல்லுங்கள். மேலும், ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களோடு இணைந்து, இஸ்லாத்தை ஏற்க மறுத்து அதை எதிர்த்துப் போர்புரிவதற்கு கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கும் குஸாஆவின் அந்தக் கிளர்ச்சியாளர்களுக்கு தண்டனை கொடுங்கள்.

எனவே, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) ஆகிய இருவரும் இணைந்து பனூ குஸாஆவின் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். மேலும், அவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டார்கள்.

இதன் விளக்கத்தில் ஓர் எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார்:

பனூ குஸாஆ கோத்திரத்தினர் மகிழ்ச்சியுடன் இஸ்லாத்தில் நுழைந்திருக்கவில்லை. மாறாக, இதர கோத்திரங்களைப் போன்று அவர்களும் அச்சத்தின் காரணமாகவோ அல்லது பொருள், கண்ணியம் ஆகியவற்றின் மீதான பேராசையிலோ இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் உள்ளம் இஸ்லாம் மீதான அன்பை விட்டும் காலியாக இருந்தது. எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, முஸ்லிம்கள் பலவீனமாக இருப்பதாக உணர்ந்ததுமே அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்துவிட்டார்கள். கிலாஃபத் அவையிலிருந்து கட்டளை கிடைத்ததுமே ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் தமது படையுடன் முதலில் சென்ற அதே வழியாக ஜூஸ்லாமை நோக்கிப் பயணமானார்கள்.

அங்கு சென்று, பனூ குஸாஆ போர் புரிவதற்கு முழு ஆயத்தத்தோடு இருப்பதை பார்த்தார்கள். போர் ஆரம்பமானது. பயங்கரமான போர் நடைபெற்றது. முன்னரைப் போன்று இப்போதும் குஸாஆவுக்குத் தோல்வியைத் தழுவ நேரிட்டது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அந்த மக்களிடம் ஸகாத் வாங்கிக் கொண்டு, மீண்டும் அவர்களை இஸ்லாத்தின் அரவணைப்பில் கொண்டு வந்து, உதவப்பட்டவராகவும் வெற்றிபெற்றவராகவும் மதீனாவுக்குத் திரும்பிவந்துவிட்டார்கள்.

மற்ற போர்ப் படைகளைப் பற்றிய குறிப்பு இனி வரும் காலங்களில் எடுத்துரைக்கப்படும். இன்ஷாஅல்லாஹ்.

தமிழாக்கம் :
மவ்லவி அதாவுல் முக்னீ

* * * * *

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad